## சுருக்கம்

அறிவிப்புகள் – 2024-25-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – புதிதாக 5 மாணவியர் விடுதிகள் தொடங்க நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை**

அரசாணை (நிலை) எண். 107

நாள் : 29.11.2024
குரோதி, கார்த்திகை -14,
திருவள்ளுவர் ஆண்டு, 2055

படிக்கப்பட்டவை:

1. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.சி1/846/2024, நாள் 05.07.2024, 16.09.2024 மற்றும் 18.10.2024
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.சி2/2817/2024, நாள் 08.07.2024.

******

**ஆணை:**

2024-25 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியரின் நலன் கருதி 500 மாணவியர் பயன்பெறும் வகையில் பின்வரும் இடங்களில் 5 புதிய கல்லூரி விடுதிகள் 2 கோடியே 83 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

1. பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, அந்தியூர், ஈரோடு.
2. பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கோவில்பட்டி, தூத்துக்குடி

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திட்டக்குடி, கடலூர்.
4. பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்.
5. பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிவகாசி, விருதுநகர்

2. மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் புதிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளை தலா 100 மாணவியர் தங்கும் வகையில் தொடங்கலாம் என்றும், மேலும், புதிதாக தொடங்கப்படும் 5 விடுதிகளுக்கு பின்வரும் பணியிடங்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் அப்பணியிடங்களை நிரந்தர மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் தோற்றுவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

| வ. எண் | பணியிடம் | ஊதிய விகிதம் | தலா ஒரு விடுதிக்கான பணியிடங்கள் எண்ணிக்கை | ஐந்து விடுதிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பி.எட்., பட்டதாரி போதகக் காப்பாளினி | ரூ.36,400-1,15,700 | 1 | 5 |
| 2 | சமையலர் (பெண்) | ரூ.15,700-50,000 | 2 | 10 |
| 3 | காவலர்/ஏவலர் (பெண்) | ரூ.15,700-50000 | 1 | 5 |
| 4 | துப்பரவு பணியாளர் (பெண்) | மாதம் ரூ.3,000/- (தொகுப்பு ஊதியம்) | 1 | 5 |

3. ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் புதிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகள்

தொடங்குவதற்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூ.2,49,35,400/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.36,63,250/- என மொத்தம் ரூ.2,85,98,650/-க்கு உரிய கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோரின் கருத்துருவினை ஆய்வு செய்து,

i. ஈரோடு மாவட்டம் அந்தியூர், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் கவுண்டம்பாளையம், விருதுநகர் மாவட்டம் சிவகாசி மற்றும் கடலூர் மாவட்டம் திட்டக்குடி ஆகிய 5 இடங்களில் இணைப்பு I-ல் குறிப்பிட்டுள்ளவாறு புதிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகளை தலா 100 மாணவியர் தங்கும் வகையில் தொடங்க அனுமதியும்,

ii. புதிதாக தொடங்கப்படும் 5 விடுதிகளுக்கும் தலா ஒரு போதகக் காப்பாளினி (நிலை-16, ரூ.36,400-1,34,200) பணியிடம் வீதம் 5 பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் (நிரந்தர அடிப்படை) தோற்றுவிக்கவும், மேலும், சமையலர், காவலர் / ஏவலர் மற்றும் துப்புரவு பணியாளர் ஆகிய பணியிடங்களை புதிதாகத் தோற்றுவிப்பதற்கு பதிலாக வெளிமுகமை மூலம் (Outsourcing Agency) பணியமர்த்திக் கொள்ள அனுமதியும்,

iii. 5 புதிய விடுதிகள் தொடங்கத் தேவைப்படும் தொடர் செலவினம் ரூ.1,96,61,800/- மற்றும் தொடராச் செலவினம் ரூ.36,63,250/- என மொத்தம் ரூ.2,33,25,050/- க்கு (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து ஐம்பது மட்டும்) நிருவாக அனுமதியும், 2024-25 ஆம் ஆண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினத்திற்கு தேவையான தொகை ரூ.92,25,800/-க்கு (ரூபாய் தொண்ணூற்று இரண்டு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பும்

வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. 5 விடுதிக்கான தொடர் செலவினம் மற்றும் தொடராச் செலவினம் முறையே இணைப்பு-II மற்றும் இணைப்பு-III-ல் இணைக்கப்பட்டுள்ளன.

6. மாணாக்கர் சேர்க்கையின் அடிப்படையில் 5 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுதல்/ விடுதிகளை தொடர்ந்து நடத்துதல் ஆகியவை குறித்து மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பரிசீலிக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட ஆணையர்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. மேற்காணும் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் பணி நியமன நாள் முதல் ஊதியம் மற்றும் இதரப் படிகளை பெற தகுதியுடையவர் ஆவர்.

8. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டதொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

i) <u>பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி – 4 (ரூ.73,80,640/-)</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்.

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) | 3 மாதங்களுக்கு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30101 | 33,55,200 | 8,38,800 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277-AA-30301 | 16,77,600 | 4,19,400 |
| | 01 | அகவிலைப்படி | | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30106 | 40,800 | 10,200 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-AA-30102 | 14,400 | 3,600 |
| | 02 | மருத்துவப்படி | | | |
| 5. | 333 | தொழில்முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் | 2225-03-277-AA-33304 | 25,53,120 | 6,38,280 |
| | 04 | ஒப்பந்த ஊதியம் | | | |
| 6. | 306 | வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் | 2225-03-277-AA-30601 | 9,60,000 | 2,40,000 |
| | 01 | வாடகை | | | |
| 7. | 318 | பராமரிப்பு | 2225-03-277-AA-31801 | 2,09,600 | 2,09,600 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA-32401 | 6,00,000 | 1,80,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | | |
| 9. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277-AA-36709 | 62,83,200 | 19,01,280 |
| | 09 | ஏனையவை | | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 35,520 | 8880 |
| | 01 | தொலைப்பேசிக் கட்டணங்கள் | | | |
| | | | மொத்தம் | 1,57,29,440 | 44,50,040 |

| தொடராச் செலவினம் | | | | |
|---|---|---|---|---|
| 11. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30505 | 2,40,000 |
| | 05 | அறைகலன் | | |
| 12. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225-03-277-AA-31901 | 15,33,000 |
| | 01 | வாங்குதல் | | |
| 13. | 334 | ஏனைய செலவுகள் | 2225-03-277-AA-33401 | 25,000 |
| | 01 | ஏனைய இனங்கள் | | |
| 14. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-AA-32401 | 5,92,600 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-AA-30501 | 20,000 |
| | 01 | தொலைப்பேசிக் கட்டணங்கள் | | |
| 16. | 334 | ஏனையச் செலவுகள் | 2225-03-277-AA-33402 | 2,00,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிக்கு புத்தகங்கள், குறித்த கால வெளியிடுகள் வழங்குதல் | | |
| 17. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225-03-277-AA-37601 | 3,20,000 |
| | 01 | வழங்குதல் | | |
| | | | மொத்தம் | 29,30,600 |

(ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி-1 ரூ. 18,45,160/-</u>

2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள்

| வ. எண். | கணக்குத் தலைப்பு | | IFHRMS த.தொ.கு. | தொகை (ரூ.) | 3 மாதங்களுக்கு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| தொடர் செலவினம் | | | | | |
| 1. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-BC-30101 | 8,38,800 | 2,09,700 |
| | 01 | அடிப்படைச் சம்பளம் | | | |
| 2. | 303 | அகவிலைப்படி | 2225-03-277--BC-30301 | 4,19,400 | 1,04,850 |
| | 01 | அகவிலைப்படி | | | |
| 3. | 301 | சம்பளங்கள் | 2225-03-277-BC-30106 | 10,200 | 2,550 |
| | 06 | வீட்டு வாடகைப் படி | | | |
| 4. | 301 | சம்பளங்கள் | 2225-03-277--BC-30102 | 3,600 | 900 |
| | 02 | மருத்துவப்படி | | | |
| 5. | 333 | தொழில்முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் | 2225-03-277--BC-33304 | 6,38,280 | 1,59,570 |
| | 04 | ஒப்பந்த ஊதியம் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 306 | வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் | 2225-03-277-BC -30601 | 2,40,000 | 60,000 |
| | 01 | வாடகை | | | |
| 7. | 318 | பராமரிப்பு | 2225-03-277-BC -31801 | 52,400 | 52,400 |
| | 01 | குறித்த காலப் பராமரிப்பு | | | |
| 8. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-BC -32401 | 1,50,000 | 45,000 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | | |
| 9. | 367 | உணவளிக்கும்/உணவுச் செலவுகள் | 2225-03-277-BC -36709 | 15,70,800 | 4,75,320 |
| | 09 | ஏனையவை | | | |
| 10. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-BC -30501 | 8,880 | 2,220 |
| | 01 | தொலைப்பேசிக் கட்டணங்கள் | | | |
| | | | மொத்தம் | 39,32,360 | 11,12,510 |

| தொடராச் செலவினம் | | | | |
|---|---|---|---|---|
| 11. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-BC-30505 | 60,000 |
| | 05 | அறைகலன் | | |
| 12. | 319 | இயந்திரமும் சாதனமும் | 2225-03-277-BC-31901 | 3,83,250 |
| | 01 | வாங்குதல் | | |
| 13. | 334 | ஏனையச் செலவுகள் | 2225-03-277-BC-33401 | 25,000 |
| | 01 | ஏனைய இனங்கள் | | |
| 14. | 324 | பொருள்களும் வழங்கலும் | 2225-03-277-BC-32401 | 1,29,400 |
| | 01 | பொருள்களும் வழங்கலும் | | |
| 15. | 305 | அலுவலகச் செலவுகள் | 2225-03-277-BC-30501 | 5,000 |
| | 01 | தொலைப்பேசிக் கட்டணங்கள் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | 334 | ஏனையச் செலவுகள் | 2225-03-277-BC - 33402 | 50,000 |
| | 02 | நூலகங்கள் முதலியவற்றிக்கு புத்தகங்கள், குறித்த கால வெளியிடுகள் வழங்குதல் | | |
| 17. | 376 | கணினியும் துணைப் பாகங்களும் | 2225- 03- 277-BC - 37601 | 80,000 |
| | 01 | வழங்குதல் | | |
| | | | மொத்தம் | 7,32,650 |

9. பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.92,25,800/-, 2024-25-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2024-25-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் ஆகியோருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2024-25-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி, மிபி (ம) சி.ந/வ.செ.பொ.-I]த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேற்காணும் 5 புதிய கல்லூரி விடுதிகளும் முறையாக தொடங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இணைப்பு 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள விடுதிகளுக்கு வெளிமுகமை மூலம் தேர்வு செய்யப்படும் பணியாளர்களுக்கு அரசாணை(நிலை) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த்துறை, நாள்.11.10.2017-இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி ஊதியம் வழங்குவதை உறுதி செய்து கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 7767446/நிதி(பி,மிபி மற்றும் சிந)/2024, நாள். 29.11.2024-ல் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1565 (ஆயிரத்து ஐநூற்று அறுபத்தைந்து) (IFHRMS ASL No.2024111565) மற்றும் பணியிட பேரேடு எண் PSL No.202411PSL0184-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை- 5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை- 5.
மாநில கணக்காயர், சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2), சென்னை-18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

<u>நகல்</u>

இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை-5.,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-5.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுச்சூழல் &

காலநிலை மாற்றம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை முதன்மைச் தனிச்செயலர், சென்னை-9.
நிதி (பி, மிபி மற்றும் சிந/வ.செ.பொது-1/2/வ.வ.-1/மை.ம.ஆ.பி)த் துறை,
சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்( பிந3) துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/11/2024
பிரிவு அலுவலர்.
29/11/2024

இணைப்பு-I

அரசாணை (நிலை) எண்.107, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 29.11.2024-ன் இணைப்பு.

5 கல்லூரி மாணவியர் விடுதிகள் மற்றும் அவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவிகளின் எண்ணிக்கை

| வ. எண். | விடுதியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, அந்தியூர், ஈரோடு மாவட்டம். | 100 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம். | 100 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 100 |
| 4. | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம். | 100 |
| 5. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம். | 100 |

சா. விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

29/11/2024
பிரிவு அலுவலர்.

29/11/2024

## இணைப்பு-II

அரசாணை (நிலை) எண்.107, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 29.11.2024-ன் இணைப்பு.

### தொடர் செலவினம்

| வ எண். | பதவி மற்றும் குறைந்தபட்ச ஊதியம் | 4 பிந விடுதிக்கான தொகை | ஒரு மி.பிந விடுதிக்கான தொகை | மொத்தம் (பிந+மி.பிந) விடுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | பி.எட்., பட்டதாரி போதக காப்பாளினி (நிலை-16, ரூ.36,400-1,34,200) என்ற ஊதிய ஏற்றமுறை (Rs.106000x3x1= 1272000) | 12,72,000 | 3,18,000 | 15,90,000 |
| 2. | இரு சமையலர் பணியிடங்கள் (வெளிமுகமை மூலமாக) | 6,38,280 | 1,59,570 | 7,97,850 |
| 3. | ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் (வெளிமுகமை மூலமாக) | | | |
| 4. | ஒரு துப்புரவு பணியாளர் பணியிடம் (வெளிமுகமை மூலமாக) | | | |
| 5. | விடுதி வாடகை (ரூ. 20000 x 1 X3) | 2,40,000 | 60,000 | 3,00,000 |
| 6. | குறித்த கால பராமரிப்பு செலவினம் ( ரூ.50,000 ) | 2,00,000 | 50,000 | 2,50,000 |
| 7. | சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (100(மாணவியர்)X ரூ.150X3(மாதங்கள்) X1 | 1,80,000 | 45,000 | 2,25,000 |
| 8. | 100 மாணவியர்கள் மற்றும் 2 சமையலர்களுக்கான உணவுக் கட்டணம் (102 X ரூ.1500 X 3(மாதங்கள்)= 4,59,000) | 18,36,000 | 4,59,000 | 22,95,000 |
| 9. | சிறப்பு உணவு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவினம் (102 x 2 (பண்டிகை) x ரூ.80 = ரூ.16,320) | 65,280 | 16,320 | 81,600 |
| 10. | தொலைப்பேசி கட்டணம் மூன்று மாதங்கள் செலவு (ரூ.740 x3 ) | 8,880 | 2,220 | 11,100 |
| 11. | DTH இணைப்பு ஒரு வருடத்திற்கான செலவு | 9,600 | 2,400 | 12,000 |
| | மொத்தம் | 44,50,040 | 11,12,510 | 55,62,550 |

சா. விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.
29/11/2024

## இணைப்பு-III

அரசாணை (நிலை) எண். 107, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த் துறை, நாள் 29.11.2024-ன் இணைப்பு.

### தொடராச் செலவினம்

| வ. எண் | | பொருட்கள் | 4 விடுதிக்கான செலவினம் | 1 விடுதிக்கான செலவினம் | மொத்தம் (பிந+மி.பிந) விடுதிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | | மரச்சாமன்கள் (ரூ. 40,000) (Steel Table& Steel wire chairs) புத்தக அலமாரி (ரூ 20,000) | 2,40,000 | 60,000 | 3,00,000 |
| 2. | | இயந்திரமும் சாதனமும் | | | |
| | i) | எரிவாயு இணைப்பு | 2,00,000 | 50,000 | 2,50,000 |
| | ii) | அரவை இயந்திரம் | 1,00,000 | 25,000 | 1,25,000 |
| | iii) | குடிநீர் சுத்திகரிப்பு கருவி | 60,000 | 15,000 | 75,000 |
| | iv) | இன்வெர்ட்டர் | 1,00,000 | 25,000 | 1,25,000 |
| | v) | முதலுதவிப் பெட்டி | 5,000 | 1,250 | 6,250 |
| | vi) | விளையாட்டுக் கருவிகள் (விளையாட்டுக் கருவிகள் - 20000+ உடற்பயிற்சி கருவிகள் - 20000) | 1,60,000 | 40,000 | 2,00,000 |
| | vii) | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி (43" LED) | 1,60,000 | 40,000 | 2,00,000 |
| | viii) | பூச்சி அழிப்பான்-1 | 24,000 | 6,000 | 30,000 |
| | ix) | மின் அரைப்பான்-1 | 40,000 | 10,000 | 50,000 |
| | x) | இட்லி வேகவைப்பான் -1 | 80,000 | 20,000 | 1,00,000 |
| | xi) | தீயணைப்பான் கருவி-2 | 24,000 | 6,000 | 30,000 |
| | xii) | தோசைக்கல் | 80,000 | 20,000 | 1,00,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | xiii) | CCTV கேமரா-5 | 4,00,000 | 1,00,000 | 5,00,000 |
| | xiv) | சுகாதார குட்டைத் தகளி-1 | 1,00,000 | 25,000 | 1,25,000 |
| 3. | பாத்திரம் | | 1,60,000 | 40,000 | 2,00,000 |
| 4. | பொருட்களும் வழங்கலும் | | | | |
| | i) | ஜமக்காளம் (100 x ரூ. 496) | 1,98,400 | 49,600 | 2,48,000 |
| | ii) | தட்டு மற்றும் டம்ளர் (100 x ரூ.125) | 50,000 | 12,500 | 62,500 |
| | iii) | பெட்ஷீட் (100x ரூ. 323) | 1,29,200 | 32,300 | 1,61,500 |
| | iv) | தலையணை (100X ரூ. 200) | 80,000 | 20,000 | 1,00,000 |
| 5. | செம்மொழி நூலகம் | | 2,00,000 | 50,000 | 2,50,000 |
| 6. | தொலைப்பேசி இணைப்பு பெறுவதற்கான கட்டணம் | | 20,000 | 5,000 | 25,000 |
| 7. | மின் நூலகம் (All in one Desktop, Printer & UPS) | | 3,20,000 | 80,000 | 4,00,000 |
| | | மொத்தம் | 29,30,600 | 7,32,650 | 36,63,250 |

சா. விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

[signature] 29/11/2024
பிரிவு அலுவலர்.
29/11/2024